# வீடு / கடை வாடகை ஒப்பந்த பத்திரம்

2021 ஆம் நவம்பர் மீ 1 வக்கு தமிழ் ........ ஆம் ........ மீ ........ வ
ராமநாதபுரம் ஜில்லா ........ தாலுகா ........
........ வது வார்டு 8/95 டோர் நிர் தெற்கு தரவை தெருவிலிருக்கும்
திரு மாணிக்கம் குமாரர் சி மோகனகுமார் 1–வது பார்ட்டியாகவும்
மதுரை ஜில்லா ........ தாலுகா 4/ம
பிருந்தாவனம் 3வது தெருவிலிருக்கும் ........ குமாரர்
யுனிக் சொல்யூஷன்ஸ் கம்பெனி 2–வது பார்ட்டியாகவும் எழுதிக் கொண்ட வாடகை ஒப்பந்த பத்திரம்.

1–வது பார்ட்டிக்கு சொந்தமான இதனடியில் கண்ட கட்டிடத்தை 2–வது பார்ட்டி 1/11/2021 தேதி முதல் மாதம் 1–க்கு வாடகை ரூ. 15,000 (ரூபாய் பதினைந்து ஆயிரம் மட்டும்) வீதம் பேசி வாடகைக்கு இருந்து வருவதற்கு 11 மாத கெடுவுக்கு 2–வது பார்ட்டி 1–வது பார்ட்டியிடம் பேசி ஒப்புக்கொண்டிருக்கிறபடி மேற்படி தேதி முதல் அந்தந்த மாத வாடகையை அந்தந்த மாதம் 30–ம் தேதிக்கு 2–வது பார்ட்டி 1–வது பார்ட்டியிடம் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும், ரசீது இல்லாமல் செலுத்தப்படும் வாடகைகளுக்கு வேறு எவ்வித ருஜுவும் செல்லத்தக்கதில்லையென்றும் மேற்படி தவணை முடிந்தவுடன் அடியிற்கண்ட கட்டிடத்தை எவ்வித ஆட்சேபனையன்னியில் காலி செய்துஎதாஸ்தியில்நல்ல நிலைமையில் 1–வது பார்ட்டியிடம் 2–வது பார்ட்டி ஒப்புவிக்கவேண்டுமென்றும் வாடகைக்கு இருந்து வரும் காலத்தில் எந்த மாதத்திலாவது வாடகை செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளத் தவறினால் பிந்திய வாய்தா சம்பந்த மன்னியில் மேற்படி கட்டிடத்தை 2–வது பார்ட்டி காலிசெய்து 1–வது பார்ட்டியிடம் ஒப்புவிக்க கட்டுப்பட்டிருப்பது மன்னியில் அதுவரையில் ஏற்படும் வாடகை பாக்கிகளையும் மாதம் 1–க்கு 100–க்கு ரூபாய் 2 வீதம் வட்டியுடன் செலுத்த கடமைப்பட்டிருக்கிறார் என்றும் அப்படிச் செலுத்த தவறினால் அதனால் 1–வது பார்ட்டிக்கு ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் 2–வது பார்ட்டி கட்டுப்பட்டவர் என்றும் இதன் மூலம் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

இதற்கு 1–வது பார்ட்டியிடம் 2–வது பார்ட்டி அட்வான்சாக 1-11-2021 தேதியில் ரூ. 1,00,000 செலுத்தி ரசீது பெற்றுக் கொண்டிருக்கிறார், மேற்படி துகை ரூபாய் 1,00,000 ........யும் 2–வது பார்ட்டி கட்டிடத்தை காலி செய்யும் காலத்தல் 1–வது பார்ட்டியிடம் ரசீது கொடுத்துப் பெற்றுக் கொள்ள வேண்டியது.

2–வது பார்ட்டி எக்காரணத்தைக் கொண்டும் அடியிற்கண்ட கட்டிடத்தை உன் வாடகைக்கு விடக்கூடாது. மேற்படி கட்டிடத்தை 2–வது பார்ட்டி எந்தவிதமான ரிப்பேரும் செய்யக்கூடாது.

1–வது பார்ட்டிக்கு வீடு / கடை தேவையாய் இருந்தாலும் 2–வது பார்ட்டிக்கு வீடு / கடை தேவையில்லாவிட்டாலும் முறையே ஒருமாத நோட்டீஸ் கொடுத்து காலி செய்து கொள்ள வேண்டும்.

1–வது பார்ட்டி வீட்டில் / கடையில் அரசாங்கத்திற்கு விரோதமானதாகவோ, சுகாதாரங்களுக்கு புறம்பாகவோ அல்லது அபாயகரமானதாகவோ உள்ள சாமான்களை வைத்து புழங்கவோ அல்லது வியபாரம் செய்யவோ கூடாது. 1–வது பார்ட்டியின் வீட்டை / கடையை 2–வது பார்ட்டி சுத்தமாகவும். நல்ல நிலைமையிலும் வைத்துக் கொள்ள வேண்டும்.

மின்சார கட்டணத்தை 2 வது பார்ட்டி செலுத்த வேண்டியது. குழய் வரி
வீட்டு வரி 1 வது பார்ட்டி செலுத்த வேண்டியது.

## வாடகைக்கு விடப்பட்ட சொத்து விபரம்

ஜில்லா ராமநாதபுரம் தாலுகா ........
71, சாலை தெரு, ராமநாதபுரம், தமிழ்நாடு – 623501

சாக்ஷிகள் 1. Sujatha 1–வது பார்ட்டி Mohanakumar

2. P. Arz 2–வது பார்ட்டி [signature]

இதை பூர்த்தி செய்ததும் சாக்ஷியுமான